செய்தி வெளியீடு எண்—660 நாள்—13.10.2007

# <u>பேரூராட்சி தலைவர்கள் முகவரி தொகுப்பு 2007</u>
# <u>மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும்</u>
# <u>உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் வெளியிட்டார்கள்</u>

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமைச் செயலகத்தில் 13.10.2007 அன்று **பேரூராட்சி தலைவர்கள் முகவரி தொகுப்பு 2007** என்ற முகவரி தொகுப்பை வெளியிடப்பட்டார். சில பேரூராட்சித் தலைவர்களுக்கு இந்த முகவரி தொகுப்பு மாண்புமிகு அமைச்சர் அவர்களால் இன்று வழங்கப்பட்டது.

இந்நூலில் பேரூராட்சித் தலைவர்களின் புகைப்படத்துடன் பெயர், முகவரி, தொலைபேசி எண், சார்ந்துள்ள கட்சி ஆகிய விவரங்கள் தொகுக்கப்பட்டுள்ளன. இந்நூலின் மூலம், அரசு அலுவலர்கள், பேரூராட்சி தொடர்புடைய நிறுவனங்கள் ஆகியோர் ஒருவருக்கொருவர் தொடர்பு கொள்ள மிகவும் எளிதாக இருக்கும் என்று நம்பப்படுகிறது. இந்த நூல் குறித்த விவரங்கள் பேரூராட்சிகள் இயக்ககத்தின் இணைய தளத்தில் தரப்பட்டுள்ளது. பேரூராட்சித் தலைவர்கள் தங்களுக்குள் கருத்து பரிமாற்றம் செய்வதற்கும், அனுபவங்களை பகிர்ந்து கொள்வதற்கும், அரசினால் செயல்படுத்தப்படும் திட்டங்கள் குறித்து கலந்துரையாடவும் இந்நூல் மூலம் வாய்ப்பு ஏற்படுத்தி தரப்பட்டுள்ளது.

இவ்விழாவில் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசு செயலர் திரு.கே.தீனபந்து,இ.ஆ.ப, பேரூராட்சிகளின் இயக்குநர் டாக்டர்.கே.கோபால்,இ.ஆ.ப. மற்றும் பேரூராட்சிகளின் இயக்கக அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

வெளியீடு— இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை—9.